**<u>O.S.No.98/2012</u>**

<u>பி.வா.சா.01, திரு. ராமமூர்த்தி</u>
நாள் : 13.02.2025 நேரம் : 03.37 P.M.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1)நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியாவேன். இவ்வழக்கின் வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தாவா சொத்துக்களில் 7ல் 1 பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். எத்தனை சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 40 சொத்துகளுக்கு மேல் இருக்கும். தாவா சொத்துகளுக்குரிய சர்வே எண், விஸ்தீரணம், நான்குமால்கள் விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்துக்கள் நிறைய உள்ளதால் என்னால் சொல்ல முடியவில்லை. எனது தகப்பனார் பெயர் சேதுதேவர். எனது தாயார் பெயர் முத்திருளாயி. என்னுடன் பிறந்தது வாதிகள், 1,7,10,11 பிரதிவாதிகள் மற்றும் இறந்துபோன சண்முகவள்ளி ஆவார்கள். இறந்துபோன சண்முகவள்ளியின் கணவர் 2ம் பிரதிவாதி என்றாலும், அவரது வாரிசுகள் 3 முதல் 6 பிரதிவாதிகள் என்றாலும் சரிதான்.

விசாரணை முடிவுற்ற நேரம்: 03.44 P.M

சாட்சியின் கையொப்பம்.